RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI: 10.34256/irjt22s737

# தொல்குடி தமிழரின் அடையாளங்கள்

## கு. உமாதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, எத்திராஜ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600008, தமிழ்நாடு, இந்தியா.

# Identity of Tamil Tribal

**K. Umadevi [a, *]**

[a] Department of Tamil, Ethiraj College for Women, Chennai-600008, Tamil Nadu, India

* Corresponding Author: gundalakesi@gmail.com

Received: 23-12-2021
Revised: 29-04-2022
Accepted: 16-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

The archeological documents, the antiquity of the language, and the ethnic culture are the basic factors to know the history of Tamil. Based on these facts, the research book "Tamilar Ataiyalankal" written by researcher K. Nedunchezhiyan was published in 2006. Nine articles are included in this book which has won the best book award of 2006 by the Tamil Nadu Government annually. his article describes the establishment of Tamil values and Tamil culture by combining the triads of Tamils with the triads set by the Tamils, the astronomical thought of the Tamils, the coincidence theory that is opposite to the Vedic tradition, and the accidental events that can occur in human life, i.e. the reaction, and the worship traditions of the tribal Tamils as a set of three: prosperity-heroism-knowledge.

**Keywords:** Tamilar Ataiyalankal, K. Nedunchezhiyan, Ethnic Culture, Human Life

## முன்னுரை

மனிதகுல வரலாற்றில் மானுடமும் மானுடவாழ்வும் பெற்ற பெருவளர்ச்சியின் தோற்றுவாயாக விளங்குவன ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், அயல்நாட்டவரின் குறிப்புகள் ஆகிய தொல்லாவணங்கள் ஆகும். இவற்றோடு மொழிசார் ஆய்வுகளும் பண்பாட்டு எச்சங்கள் சார்ந்த ஆய்வுகளும் முன்னிலைப் பெறுகின்றன. இத்தகைய ஆய்வுகளுக்கு வலுச்சேர்க்கும் தமிழர் பண்பாட்டு வரலாற்றின் பனுவலாக `தமிழரின் அடையாளங்கள்` எனும் நூல் ஆய்வுலகில் இதுவரை திறக்கப்படாத பல புதிய சாளரங்களைத் திறந்து வைக்கிறது எனலாம்.

## தொல்குடி தமிழரின் அடையாளங்கள் - நூல் அமைப்பு

உலகில் தோன்றிய தொன்மைச் சமூகங்களில் இன்றளவும் மிகக் குறைவான மூடநம்பிக்கைகளைக் கொண்டுள்ள சமூகமாக தமிழ்ச் சமூகம் விளங்குகிறது எனலாம். அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்க அறிஞர்கள் நிலவிலிருந்தே நைல்நதி உருவாகி வருகிறது எனச் சொல்லிக் கொண்டிருந்தக் காலத்தில் உலகின் இயக்கத்தையும் உயிர்களின் இயக்கத்தையும் அறிவியல் மற்றும் மெய்யியல் கோட்பாட்டின் தனித்தன்மைகளைக் கொண்டது என்று கண்டுணர்ந்தவர்கள் தமிழர்கள். இதனைத் தொல்காப்பியம், 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத் திரிவு இல் சொல்லொடு தழாஅல் வேண்டும் என்று கூறுவதன் மூலம் அறியலாம்.

மக்களுக்குத் தொலைவில் நின்றுவிட்ட அறிவுலகத்தில் தேங்கிக்கிடக்கும் அறிவுகளையும் மூடநம்பிக்கைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டக்கூடிய பெரியாரியம் குறித்தும், ஏட்டுச்சுவடிகளில் தொகுக்கப்பட்டுள்ள கற்றோர் இலக்கியங்களில் மட்டுமே வரலாறுகள் காணக்கிடைக்குமென்ற ஆய்வுப்போக்கை மாற்றிய அறிஞர் நா. வானமாமலையின் ஆய்வுகள் குறித்தான செய்திகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## தமிழர் வழிபாட்டு மரபு

திணைசார் குடிகளான தமிழர்களோடு வழிபாட்டு மரபு என்பது இரண்டறக் கலந்த ஒன்றாகும். இம்மரபிலுள்ள நாட்டார் தெய்வங்களும் அதன் தொடர்ச்சியாக வந்த நிறுவனப்படுத்தப்பட்ட தெய்வங்களும் வழிபாட்டுக்குரியனவாக பின்பற்றப்பட்டன. தமிழரின் வழிபாட்டை வளமை வழிபாடு, வீரவழிபாடு, அறிவு வழிபாடு என மூன்றாகப் பகுக்கிறார் இந்நூலாசிரியர். “இவற்றுள் வளமை வழிபாடு மிகவும் தொன்மையானது. தமிழ்க் குமுகத்தின் வளர்ச்சியோடு வளர்ந்த இவ்வழிபாட்டின் தொடர்ச்சியில் உருவானதே கொற்றவை வழிபாடு எனும் தாய்த்தெய்வ வழிபாடு. தன் இனம் வளரவும் வாழவும் வளமை வழிபாட்டைத் (Fertility Culty) தொடங்கிய மக்கள், நாகரிக வளர்ச்சியில் மற்ற இனக்குழுவிலிருந்து தம் குழுவைக் காப்பாற்றிக் கொள்ளவும் சிலபோது தம் மேலாண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவும் போர் மேற்சென்ற அந்நிலையில் உருவானதே கொற்றவை வழிபாடாகும்.” (Jaggubhai, 2005).

பயிர்களின் செழிப்பிற்கும் விளைச்சலுக்கும் காரணமாக இருக்கும் நிலம் இனப்பெருக்கத்திற்கும் மறு உற்பத்திக்கும் குறியீடாக விளங்கும் பெண்மையின் வளத்திற்கு நிகராகக் கருதப்பட்டது. எனவேதான் நிலம், நிலமடந்தை, நிலமகள், பூமித்தாய் அனைத்தும் பெண்ணெனவே உருவகிக்கப்பட்டது. தமிழர்கள் தம் ஆதித்தாயாக இன்றளவும் போற்றி வணங்கும் `கொற்றவை வழிபாடு` தன் குழந்தைகளையும் குடிகளையும் காக்க படைத்தலைமை ஏற்று போரில் வெற்றி கண்டதன் அடையாளமாக விளங்குகிறது என்கிறார் க.நெடுஞ்செழியன். மேற்கண்ட தமிழர் வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாக தந்திர வழிபாடு, முருக வழிபாடு, அறிவு வழிபாடு, கடவுள் வழிபாடு போன்ற வழிபாட்டு வகைமைகளையும் தெளிவாக விளக்கியுரைக்கிறார். மேலும் ஐயனார் யார்? என்ற கேள்வியைத் தொடங்கிய நூலாசிரியர் ஐயனார் தமிழர்களின் சமயமான ஆசீவகக் கோட்பாட்டின் குறியீடு என்று குறிப்பிட்டு தமிழர்களின் சிறுதெய்வ வழிபாட்டு மரபுக்கு மேலும் வலு சேர்க்கிறார் (Jaggubhai, 2004).

எதிர்நாட்டுடன் போரிடும் வேந்தனுக்குத் துணையாக நின்று வெற்றியை ஈட்டித் தந்து வீரமரணமடைந்த மாவீரர்களைப் போற்றும் வகையிலான நடுகல் வழிபாடு இன்றும் தமிழர்களின் பண்பாடாக விளங்குகிறது.

தமிழரின் வழிபாட்டுக்கு உரியவனாக விளங்கும் குறிஞ்சித் தலைவனான முருகனின் கொடியைப் பற்றியும் அவனது வாகனத்தைப் பற்றியும் கூறும் கட்டுரையில் சிறுதெய்வ வழிபாடான சாத்தன் வழிபாட்டு முறைமைக்கும் முருகன் வழிபாட்டு முறைமைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை தன் ஆய்வின் முடிவுகளாக இலக்கண இலக்கிய நூல்களின் உதாரணங்களோடு உறையூர் பங்குனி உத்திரம், காரிசாத்தன், வெள்ளையானை, திருப்பரங்குன்றத்தில் ஆசீவகம், தருமசாஸ்தா, ஆண்டி என்ற உட்தலைப்புகளுக்கு ஏற்ற தரவுகளை முன்வைத்து விளக்குகிறார் (Jaggubhai, 2014).

## தமிழர்களின் தொல்குடியின் வரலாறும் பண்பாடும்

தன் தொன்மைக்கால வரலாற்றினை நினைவு கூர விரும்பும் எந்த ஓர் இனமும் அதன் வேரை நாடிச்சென்று ஆய்வுக்குட்படுத்தும். அந்த வகையில் தமிழின வரலாற்றினை முச்சங்களில் கண்டெடுக்க முடிகிறது எனலாம். சங்கம், சங்ககாலம், சமயங்களும் சங்கமும் எனும் தேர்ந்த உட்தலைப்புகளில் புலவர் மரபு, பனுவல் மரபு, சமயங்களின் வழி பனுவல் மரபு முதலானவற்றை முன்வைத்து

விவாதிக்கிறது இவ்வாய்வுக் கட்டுரை. தமிழ்ச்சமூகத்தின் திணைமரபு, குடிமரபு முதலான விவாதங்களோடு தொடங்கும் கட்டுரையில் "தமிழ்ச்சமூகம் நெடுங்காலத்திற்கு முன்பே நிலக்கிழமைச் சமூகமாக இருந்து வருவதாகும். வள்ளுவர் வகுத்துள்ள இல்லற நெறி என்பதே நிலக்கிழமையின் மீது கட்டப்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது. புறத்திணை வகுத்துள்ள `ஏர்க்கள வென்றி` முதலான துறைகளும், நீர்நிலைகளைப் பெருக்க வேண்டிய தேவைகளைப் புலவர்கள் அரசர்கட்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்த பாடல்களும் அக்கருத்தை அரண்செய்வன. இவற்றிற்கெல்லாம் மணிமுடிவைத்தாற் போல அமைந்த, உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூம் விட்டேமென் பார்க்கு நிலை எனும் குறள் நிலக்கிழமையின் உயர்வையும் பறைசாற்றக் காணலாம்." தொடக்கத்தில் நிலம் என்பது மேன்மேலும் வளத்தைச் சேர்க்க பண்படுத்தப்பட வேண்டியதாகவும் உழவுத்தொழில் காக்கப்பட வேண்டியதாகவும் இருந்து வந்த நிலைமாறி பல்லவர் காலத்தில் நிலம் என்பது புரோகிதர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் உடைமையாக மாற்றப்பட்டது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கில் இக்கட்டுரையை ஆய்வு செய்துள்ளார் (Jaggubhai, 2005; (Nedunchezhiyan, 2006)).

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி தமிழர்களின் தொன்மைகளை அறிந்து கொள்ள ஆங்காங்கே தமிழகத்தில் அகழ்வாய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதனடிப்படையில் வரலாற்றில் முதல் அகழ்வாய்வு இடமாக ஆதிச்சநல்லூர் விளங்குகிறது. தமிழரின் பண்பாட்டு அடையாள ஆவணமாக விளங்கும் தாழிகளை முன்வைத்து 'ஆதிச்சநல்லூர்' எனும் பொருண்மையில் அமைக்கப்பட்டுள்ள கட்டுரையில் தமிழினத்தின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சிக்கான தடயங்களில் 'தாழி'யின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகிறார். அரசர், முனிவர் முதலான உயர் நிலையில் வாழ்ந்தவர்களைப் புதைக்கும் போது குறிப்பிட்ட தனி மனிதர்களுக்காகத் 'தாழிகள்' செய்வது தமிழர் மரபாக இருந்துள்ளது. ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட தாழியில் 'காரி அறவனத' என்ற வரிவடிவம் காணப்படுகிறது. இதனைக்கொண்டு 'காரி' என்பவருக்காக இந்தத் தாழி வனையப் பட்டிருக்கலாம் என்கிறார் நூலாசிரியர்.

இலக்கியங்கள் என்பன இனமரபின் அடையாளம் எனலாம். தமிழினத்தின் அடையாளமான சங்ககாலம் தொடங்கி சமகாலம் வரை தமிழர்கள் தாங்கள் வாழ்கின்ற சுற்றுச் சூழ்நிலைகளை முன்வைத்து பறவைகள், விலங்குகள் செடிகொடிகள் போன்றவற்றை தம் உறவாக நேசித்து வந்துள்ளனர் என்பதை பல பாடல்கள் புலப்படுத்துகின்றன. இத்தகையக் கூற்றினை உறுதிப்படுத்தும் விதமாக சங்கத் திணைமரபு கோட்பாடு விளங்குகிறது. பகற்குறி வந்த தலைவனைத் தோழி வரைவு கடாயது என்னும் துறையில் பெயர் தெரியாத புலவர் ஒருவர் பாடிய நெய்தல் நிலப்பாடலான "விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி" எனத்தொடங்கும் நற்றிணை, 172 ஆம் பாடல் உரையாசிரியர்களின் பார்வையில் உறவுமுறையின் மாண்பினை விளக்குகிறது எனலாம்.

தமிழரின் அறிவுசார் மரபுக்குச் சான்றாக வானியல் சாத்திர நூல்கள், காலக்கணித நூல்கள் போன்றவை விளங்குகின்றன. அறிவுசார் மரபில் 'தமிழரின் ஆண்டு பிறப்பு' எனும் கட்டுரை நமது பாரம்பரியப் பண்பாடான விருந்தளிப்பைக் குறிப்பிடுகிறது. இதற்குக் காரணம் தமிழர்களிடமிருந்த அறுவடை செழிப்பும் ஈகைத்தன்மையும் ஆகும். தமிழர்களின் ஆண்டு பிறப்பாக அறுவடைக்காலமான தை மாதமும் தொன்று தொட்டுவரும் சித்திரை மாதமும் என இருவேறு கருத்துகள் நிலவுவதைக் குறிப்பிடும் க.நெடுஞ்செழியன் தமிழாய்வாளர்களால் காலந்தோறும் பின்பற்றப்படும் கருத்துகளை விளக்கிக் கூறி சித்திரைமாதத்தையே தமிழரின் ஆண்டுபிறப்பாக முன்வைக்கிறார்.

"சிலப்பதிகாரம் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட அருந்தமிழ்க் காப்பியம். சேர, சோழ, பாண்டியன் எனும் தமிழக வேந்தர்களை மட்டுமல்லாது கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை என மக்கள் வாழ்வையும் மானுடவியல் நோக்கில் விளக்கிய தமிழ்த் தேசியக் காப்பியமும் அதுவே." என இந்நூலாசிரியர் குறிப்பிடும் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போன்றே திருக்குறளும் உலகமறையாக நின்றோங்கும் தமிழிலக்கியமாகும். இவ்விரு நூல்களும் தமிழர்களின் பண்பாட்டு இலக்கியங்களென என்றும் திராவிட இயக்க எழுத்தாளர்களால் கொண்டாடப்படுகிறது. தமிழிலக்கியங்களின் கருத்துகளைக் கோட்பாட்டு ரீதியாக முன் வைக்கின்ற ஆய்வாளர்களில் க. நெடுஞ்செழியன் குறிப்பிடத்தக்கவர். 'சிலம்பில் தற்செயல் கோட்பாடு' எனும் தலைப்பில் சிலப்பதிகாரக்

காப்பியத்தில் நிகழும் எதார்த்த நிகழ்வுகளை எல்லாம் விளக்கி பகுத்தறிவுக் கோட்பாடான தற்செயல் கோட்பாட்டின் வாயிலாக விளக்குகிறார் (Jaggubhai, 2006).

## கட்டுடைத்துக் கட்டமைக்கும் ஆளுமைகள்

'தமிழரின் அடையாளங்கள்' எனும் நூலில் அமைந்துள்ள 'இந்திய மெய்யியல் வரலாற்றில் பெரியாரியம்' எனும் கட்டுரையில் பொருண்மையியல் (மறுப்புக்) கோட்பாடு, கருத்தியல் (பழமைக்) கோட்பாடு எனும் இருபிரிவுகளை முன்வைக்கிறார். அதை அறிவு விடுதலைக்கும் (அறிவை வளரவிடாமல் தடுக்கும்) அறிவுக்கான தடைக்கும் இடையே நடந்த போராட்டம் என்கிறார். மேலும் இக்கட்டுரைக்கு வலு சேர்க்கும் விதமாக பெரியாரின் வேதமறுப்புக் கோட்பாடான நாத்திகக் கோட்பாட்டினைக் கோடிட்டுக் காட்டுகிறார் நூலாசிரியர். தற்கால இந்தியாவிற்கு தமிழகம் வழங்கிய அரிய அறிவுக் கொடையான பெரியாரியம் எல்லா இடங்களிலும் எல்லார் மனங்களிலும் 'சமம்' என்ற சிந்தனை ஆக்கத்தை எழுச்சியுறச் செய்வதாகும். கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பிராமணிய வேத எதிர்ப்பு, பெண்ணியம், சாதிமறுப்புத் திருமணம், மூடநம்பிக்கை ஒழிப்பு என இந்தியாவெங்கும் கிளைவிட்டு பரவும் முதன்மையானதாக விளங்குகிறது எனலாம்.

தமிழரின் இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களை மார்க்சியக் கோட்பாட்டு அடிப்படையில் ஆராய்ந்து முன்வைத்த அறிஞர் நா. வானமாமலை ஆவார். இவரது ஆய்வு முறைமைகளை பறைசாற்றும் விதமாக `பேராசிரியர் நா. வானமாமலை` எனும் தலைப்பில் க. நெடுஞ்செழியன் கட்டுரை அமைத்துள்ளார். "நாட்டார் வழக்காற்றில் இடம் பெற்றுள்ள செய்திகளில் உண்மைத்தன்மைகள் மிகுந்திருக்கும்; ஒளிவு மறைவுகள் இருப்பதில்லை. அவையடக்கம் கருதியோ, மங்கல வழக்கு, இடக்கரடக்கல் முதலான இலக்கண வழுவமைதிகள் கருதியோ அவை அழகுபடுத்தப்படுவதில்லை. உணர்வுகளின் வெளிப்பாடாய் உண்மைகளைப் பட்டாங்கமாய்க் கூறும் தன்மையே அப்பாடல்களுக்கு நிலைபேற்றை வழங்கின எனலாம்" (Jaggubhai, 2006; Nedunchezhiyan, 2006). இலக்கிய ஆய்வு என்றாலே அது சங்க இலக்கிய ஆய்வுதான் என்றும் தமிழரின் சமயம் என்றாலே அது சைவமே என்றும், உலகிலுள்ள சிறந்த மொழிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறப்புத் தன்மை என்று கூறுமிடத்தில் தமிழ்மொழி பக்தியின் மொழி என்றும் அறிஞர்கள் கருதிக் கொண்டிருந்தபோது தமிழ்மொழியை மக்களின் மொழி என்றும் அதுகூறும் இலக்கியங்கள் மானுடத்தின் ஆராய்ச்சி என்றும் முன்வைத்த இயங்கியல் கோட்பாட்டாளர் நா.வானமாமலை ஆவார்.

தமிழ்ச் சமூகத்தின் தனித்தன்மைகளை ஆராய்ந்து விளக்கும் க. நெடுஞ்செழியன் எழுதியுள்ள 'தமிழரின் அடையாளங்கள்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள ஒன்பது கட்டுரைகளும் பல்வேறு புதிய ஆய்வுமுடிவுகளை முன்வைத்தும் பல ஆய்வுகளுக்குத் திறவுகோலாகவும் எழக்கூடிய பல ஐயங்களுக்கு விடைகளாகவும் விளங்குகிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதே பொதுமறை. இந்த மனிதநேயக் கோட்பாடு வாழ்வியல் கலைகள் அனைத்திலும் வெளிப்பட வேண்டும். மனித அறிவின் விளக்கமும், கலை ஆற்றலும், அறிவியல் ஞானமும் எவ்வுயிர்த் திரளுக்கும் பொதுமைத்தானவை எனும் உலகமெங்கும் ஓர்மைக் குள்ளதாக்கும் மார்க்சிய சிந்தாந்தத்தின் நோக்கில் தன் ஆய்வுலகைப் பரப்பிய நா. வானமாமலையைக் கொண்டாடும் க.நெடுஞ்செழியனின் ஆய்வுச் சிந்தனை தமிழாய்வுலகிற்குக் கிடைத்த பெரும்பேறு எனலாம் (Jaggubhai, 2006).

## முடிவுரை

ஆய்வறிஞர் க. நெடுஞ்செழியன் எழுதிய 'தமிழரின் அடையாளங்கள்' எனும் நூல் காலந்தோறும் தமிழ்க்குடிகள் பின்பற்றிவரும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் அவர்களின் தொன்மை வரலாறு மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பற்றியும் பல அரிய உட்தலைப்புகளைக் கொண்டு விவரிக்கிறது. மேலும் பழந்தமிழ் இலக்கியங்களினூடே பரவிக்கிடக்கும் அஃறிணை உயிர்களுடனான தமிழர்களின் உறவுசார் அன்பையும் அறிவுசார் மரபுக்குச் சான்றாக ஆண்டு கணக்கிட்ட முறைமையும் பல்வேறு ஆய்வுத் தரவுகளோடு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரையின் இறுதியாக ஏற்கெனவே இச்சமூக

அமைப்பில் கட்டப்பட்டிருந்த பழமைவாதக் கோட்பாடுகளைக் கட்டுடைக்கும் பகுத்தறிவுப் பேராசான் பெரியார் மற்றும் மார்க்சிய சிந்தனையாளர் நா. வானமாமலை ஆகிய இரு ஆளுமைகளின் கருத்துகள் ஏற்படுத்திய மாற்றங்களை பதிவு செய்கிறது. படிப்போர் எண்ணத்தில் புதுப்பாய்ச்சலை ஏற்படுத்தும் க. நெடுஞ்செழியன் எழுதியுள்ள `தமிழர்களின் அடையாளங்கள்` எனும் இந்நூல் புதிய சமூகத்தைப் படைக்க நினைக்கும் தமிழ் இனவரலாற்று எழுதியல் ஆளுமைகளுக்கு ஒரு கைநூலாக விளங்கும் என்பதில் மாற்றில்லை.

## References


Jaggubhai, R., (2004) Chitthanna Vail, Palam Pathippagam, Chennai, India.

Jaggubhai, R., (2005) Sangakala Tamilarin Samayam, Palam Pathippagam, Chennai, India.

Jaggubhai, R., (2006) Tamilarin Adaiyalangal, Palam Pathippagam, Chennai, India.

Jaggubhai, R., (2014) Aaseevagamum Ayyanar Varalaarum, Palam Pathippagam, Chennai, India.

Nedunchezhiyan, K., (2006) Tamilar Ataiyalankal, Palam Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License